பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 24 திங்கட்கிழமை 10.11.2025 கதிர் 002

## இனி இது ரகசியம் அல்ல!

ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்று முடிந்த நிலையில், அதில் பேசப்பட்ட விடயம் தொடர்பில் கட்சியின் பேச்சாளர் தெரிவித்த விடயங்கள் ☞2

## 'யுக்திய' போன்று நெத்தலிகள் பிடிக்கவில்லை நாம் போதைச் சுறாக்கள் கைதுசெய்துள்ளோம்

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் பெருமிதம்

போதைப்பொருளுக்கு எதிராக ஆளும்தரப்பு எடுத்துள்ள நடவடிக்கைகளை நெருக்கடிக்குள்ளாக்குவதற்குதான் எதிர்தரப்பினர் அரசுத் தலைவர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். 'யுக்திய' சுற்றிவளைப்பில் நெத்தலி மீன்களை பிடித்ததை போன்று நாங்கள் செயற்படவில்லை. சுறாக்களை பிடித்துள்ளோம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் நேற்று நடைபெற்ற பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆளும்தரப்புக்களின் ஆசிர்வாதத்துடன் போதைப்பொருள் வர்த்தகம் நகரம் முதல் கிராமம் வரை முன்னெடுக்கப்பட்டது. பாதாளக்குழுக்களை ஆட்சியாளர்கள் பாதுகாத்தார்கள். இதன் விளைவை இன்று முழு நாடும் எதிர்கொள்கிறது.

தமது பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுவதை எந்தப் பெற்றோரும் விரும்புவதில்லை. போதைப்பொருள் ஒழிப்புப்பாக ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பெற்றோர் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள். பாதாள குழுக்களுக்கும், போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கும் போது அரசியலமைப்பு சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க்கட்சியினர் ஆளும்தரப்புக்கு எதிராக ஒன்றிணைகிறார்கள்.

அரசுத் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் போதைப்பொருள் ☞6

## ஆளும்தரப்பு அரசியல்வாதியின் குடும்பம் கைதானதும்

## போதைப் பொருள் சுற்றிவளைப்புகள் குறித்து தகவல் வெளியிடுவதற்கு தடை

துப்பாக்கிச்சூட்டில் எதிர்க்கட்சி அரசியல்வாதியொருவர் கொல்லப்பட்டால் அவர் பாதாள உலகக் குழுவுடன் அல்லது போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர் என முத்திரை குத்தப்பட்டது. இந்நிலையில் கடந்த வாரம் தேசிய மக்கள் சக்தியின் பிரதேசசபை உறுப்பினரொருவரின் குடும்பத்தார் போதைப்பொருள் வைத்திருந்தகுற்றச்சாட்டின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அதன் பின்னர் போதைப்பொருள்சுற்றிவளைப்புக்கள் குறித்ததகவல்களை ஊடகங்களுக்கு வழங்க வேண்டாம் என பொலிஸாருக்கு சுற்றுநிரூபமொன்று வெளியிடப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

ஊடகங்களுக்குதகவல்களைவழங்கவேண்டாம்எனக் கூறும் உரிமை யாருக்கும் இல்லை என சுட்டிக்காட்டிய அவர், மக்களின் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமை பறிக்கப்படுவதை முற்றாக எதிர்க்கிறார் ☞2

### லஞ்ச விசாரணை ஆணைக்குழு தலைவர்

## வெட்கம் இருந்தால் பதவி விலகட்டும்

### சம்பிக்க ரணவக்க ஆவேசம்

இலஞ்சம்அல்லதுஊழல்விசாரணைஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க முறையற்ற வகையில் நியமிக்கப்பட்டுள்ளார். வெட்கம் என்பதொன்று இருக்குமாயின் அவர் பதவி விலகவேண்டும். அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட ☞2

# செல்வத்தை ஒதுக்கி வைத்தபடியே ஜனவரியில் பொதுக் குழு கூட்டம்

### ரெலோ தலைமைக் குழுவில் நேற்று முடிவு



ரெலோ தலைவர் மீது சுமத்தப்பட்டு வரும் பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டுக்களை அடுத்து அவரைப் பதவி விலக்க வலியுறுத்தி நேற்று வவுனியாவில் கூட்டப்பட்ட அந்தக் கட்சியின்தலைமைக்குழுக்கூட்டத்தில்,இனிவரும் நாள்களில் கட்சியின் தலைமைத்துவப் ☞2

### மத்திய கிழக்கில் பதுங்கியுள்ள

## போதைப் பொருள் கடத்தல்காரர்கள் ஏழு பேர் சரணடைவதற்குத் தயார்

மத்திய கிழக்கில் தலைவறைவாகியுள்ள இலங்கையைச் சேர்ந்த 7 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இலங்கை பொலிஸ் அதிகாரிகளிடம் சரணடைய இணக்கம் தெரிவித்துள்ளார்கள். போதைப்பொருளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் ☞6

## பட்டதாரிகளுக்கு வேலை தராமல் மனஉளைச்சலுக்கு உள்ளாக்குகிறது

### ஆளும்தரப்பு மீது எதிர்க் கட்சித் தலைவர் சாடல்

ஆளும்தரப்பு இரு வரவு செலவுத் திட்டங்களில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு தொழில்களைப் பெற்றுத்தருவோம்என்றவாக்குறுதியை மீறி, அவர்களை மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசுத்தலைவர்தேர்தலுக்குப் ☞6

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனவரி முதல் சம்பள அதிகரிப்பு

அரசுத் தலைவர் அநுரகுமாரவால் வரவு - செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு ஜனவரி முதல் வழங்கப்படும். கம்பனிகள் கடந்த ஆளும்தரப்புகளுக்கு விளையாட்டுக்களை காண்பித்திருக்கலாம். ஆனால் எம்மிடம் அந்த விளையாட்டுக்கள் செல்லாது. எனவே நாம் கூறியதை நிச்சயம் செயற்படுத்துவோம் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் ☞6

## 14 இந்திய மீனவர்கள் கைது

பருத்தித்துறை கடல் எல்லையைத் தாண்டி இலங்கையின் கடற்பரப்பிற்குள் நுழைந்து சட்டவிரோதமாக மீன்பிடித்ததாகக் கூறப்படும் 14 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள்நேற்றிரவுபருத்தித்துறைகடல்பகுதியில் ☞6

## நவ. 21 கூட்டுப் பேரணியில் சம்பிக்கவின் கட்சியும் 'அவுட்'

அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டேஎதிர்க்கட்சிகள் நவம்பர் 21 ஆளும்தரப்புக்கு எதிராக ஒன்றுகூடுகின்றன. இந்தப் பேரணியில் நாங்கள்கலந்துக்கொள்ளபோவதில்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒன்றிணைந்த ☞2

## இனி இது .....

மக்களுக்குக் கிச்சுக் கிச்சு மூட்டுவதாக இருந்தன. அவர் சொல்கிறார், 'கடந்த சில வாரங்களாக திட்டமிட்ட வகையிலே சில முகநூல்களிலும், இணைய தளங்களிலும் நமது கட்சிக்கு எதிரான அல்லது கட்சியை களங்கப்படுத்தும்வகையிலேசிலஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அதனால் விமர்சனங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன' என்று.

அது பற்றித் தமது தலைமைக் குழு ஆராய்ந்தது என்றும் சொன்னவர் மேலும், 'ரெலோ தலைவராக இருக்கும் செல்வம் அடைக்கலநாதன் தொடர்பாகவும் ஒரு பெண் தொடர்பாகவும் வெளிவந்த தகவல் திட்டமிட்டு பரப்பப்பட்டது. இது உண்மையா இல்லையா என்பதை ஆராய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு இந்த விடயங்களை ஆராய்ந்து பேராளர் மாநாட்டில் வெளிப்படுத்தலைச் செய்வார்கள்' என்றும் தெரிவித்தார்.

அவரிடம் ஒரேயொரு கேள்வி மட்டும்தான் எனக்கிருக்கிறது. வெளிவந்த குற்றச்சாட்டுக்கள் ஆதரமற்றவை, கட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்திலானவை, திட்டமிட்டுப் பரப்பப்பட்டவை என்று சொன்ன பின்னர் அது உண்மையா பொய்யா என்று ஆராய்வதற்கு அதில் என்ன இருக்கின்றது? குற்றச்சாட்டுக்கள் பொய் என்ற தெரிந்தால், அதைத் தூக்கிக் கடாசிவிட்டு வேறு வேலையைப் பார்ப்பீர்களா அல்லது பொய்யைப் பற்றி ஆராய்ந்து பேராளர் மாநாட்டில் அறிக்கை அளிக்க ஒரு குழுவை நியமிப்பீர்களா? சொல்லுங்கள்!

நடந்த உண்மைகளுக்கும் பொய்களுக்கும் இடையே அல்லாடும் போது இத்தகைய தடுமாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான்.

உண்மையில் நடந்ததை நான் உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். கூட்டம் தொடங்கியதுமே, செல்வம் தலைமையில் கூட்டத்தை நடத்த முடியாது என்று எதிர்ப்புக் கிளம்பியது. அதனால் செல்வம் விலகிக்கொண்டார். அதையடுத்து உப தலைவர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் கூட்டம் தொடர்ந்து நடந்தது.

தலைமைக்குழுவில் 21 உறுப்பினர்கள். அதில் விந்தன் கட்சியைவிட்டு நிறுத்தப்பட்ட நிலையில், அவரது இடத்திற்கு யாரும் நியமிக்கப்படவில்லை. எஞ்சிய 20 பேரில் 18 பேர் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்டனர். இருவர் வரவில்லை. சுவிஸ் நாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவரும் திருகோணமலைப் பிரதிநிதியான சீலனும் பங்கேற்கவில்லை.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் தலைவரின் பாலியல் துர்நடத்தை தொடர்பான சர்ச்சையைக் கண்டித்தனர். கட்சியின் உறுப்பினர் தூக்கில் தொங்கிய சடலமாக மீட்கப்பட்டது தொடர்பில் ரெலோ தலைமை மீது கிளப்பப்படும் சந்தேகங்கள் தொடர்பிலும் விமர்சித்தனர். தலைவரின் செயல்கள் தவறு என்றனர். அதனால் கட்சிக்கும் அரசியலுக்கும் பெரும் பாதிப்பு என்றனர். அதற்குத் தான் பொறுப்பேற்றுக்கொள்கின்றார் என்று செல்வம் சொன்னார். எந்தவொரு நீதி விசாரணைக்கும் தான் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார் என்றும் உறுதியளித்தார்.

இதனால் அவர் உடனடியாகப் பதவி விலகி கட்சியையும் அரசியலையும் காப்பாற்றுவதற்கு வழிவிடவேண்டும் என்று உப தலைவர் ஹென்றி மகேந்திரன் வலியுறுத்தினார். கட்சியின் தேசிய அமைப்பாளர் இந்திரகுமார் பிரசன்னா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராத லிங்கம், சிங்கன் எனப்படும் கந்தசாமி லிங்கராசா, சபா குகதாஸ் ஆகியோர் அதனை ஆதரித்தனர். கட்சித்தலைவர் வெளியேறியே ஆகவேண்டும் என்று பிடிவாதமாக நின்றனர். ஆனால், செல்வம் அதற்கு மறுத்தார். அது தனது அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது என்றார். இத்தனை வருடங்களாகத் தான் செய்த அரசியலை அர்த்தமற்றதாக்கிவிடும் என்றார். 2026 பங்குனியில் பேராளர் மாநாடு நடத்தப்படவேண்டும் என்பதால் அதுவரையில் தான் பெயரளவில் பதவியில் தொடர அனுமதிக்க வேண்டும் என்றார். இதனால் வாக்குவாதம் நீண்ட நேரம் இழுபட்டது.

ஒரு கட்டத்தில் அப்படியானால் இந்தத் தலைமைக் குழுவில் உள்ள அனைவரும் தலைவரின் தவறுகளுக்குப் பொறுப்பேற்று ஒட்டுமொத்தமாகப் பதவி விலகி புதியவர்களுக்கு வழிவிடவேண்டும் என்று வினோ வலியுறுத்தினார். அதனை வேறு சிலரும் ஆதரித்தனர். அப்படிச் செய்வதில் அனைவருக்கும் உடன்பாடிருந்தாலும், கட்சியின் பேராளர் மாநாடு எனப்படும் பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு கட்சியின் மாவட்டக் குழுக்களைச் சீரமைத்து பேராளர் மாநாட்டிற்கான பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க கால அவகாசம் தேவைப்படும் என்பதை உப தலைவர் சுட்டிக்காட்டினார். பேச்சு அதை நோக்கித் திரும்பியதும் செல்வம் அதைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டார்.

உடனடியாகப் பேராளர் மாநாட்டைக் கூட்டி புதிய தலைவரைத் தேர்ந்தெடுங்கள், நான் அதில் போட்டியிடமாட்டேன். அதுவரையிலும் கூட கட்சிப் பணிகள் எதிலும் நான் ஈடுபடமாட்டேன். ஹென்றியின் தலைமையிலேயே அவை நடக்கட்டும். மீண்டும் தலைமைப் பதவிக்குப் போட்டியிடவும் மாட்டேன் என்றார். உடனே ஒருவர் ஒதுங்குவது என்ன ஒதுங்குவது, கட்சி உறுப்புரிமையில் இருந்தே வெளியேறவேண்டும், அரசியலில் இருந்தே ஒதுங்கவேண்டும் என்றெல்லாம் சீறினார்.

இதனால் கலந்துரையாடல் மீண்டும் இழுபறியாக நீண்டது. கூட்டத்தில் இருந்தவர்களில், செல்வம் பதவி விலகவேண்டும் என்று பிடிவதமாக இருந்த ஐவரைத் தவிர ஏனைய 13 பேரும் (இவர்களில் பெரும்பாலானவர்கள் கட்சிக்குப் புதியவர்கள், சிலர் பெரம்பான்மைக் கட்சிகளில் அரசியல் செய்துவிட்டு ரெலோவுக்குள் வந்தவர்கள்) விரைவில் பேராளர் மாநாட்டைக் கூட்டி புதிய தலைவரைத் தெரிவு செய்வது என்கிற ஏற்பாட்டை ஆதரித்தனர். விவாதம் முடிவின்றித் தொடர்ந்ததனால் இடைநிறுத்துவிட்டு அனைவரும் மதிய உணவுக்குச் சென்றனர்.

உணவு உண்டு திரும்பிய பின்னர், பேராளர் மாநாட்டை எப்போது நடத்துவது, எவ்வளவு விரைவில் நடத்த முடியும் என்பதைப் பற்றியே ஆராயப்பட்டது. அதனடிப்படையில் முடிந்த வரைவான காலமான ஜனவரியில் பேராளர் மாநாட்டைக் கூட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அதற்கான நாள் முடிவு செய்யப்படவில்லை. அதனை தலைமைக் குழுவின் கூட்டத்தை வரும் நாட்களில் 'சூம்' மூலம் கூட்டித் தீர்மானிக்கவும் இணக்கம் காணப்பட்டது.

இந்தப் பிரச்சினை இப்போதைக்கு அடங்கியதாகத் தோன்றினாலும் செல்வத்திற்கு ஜனவரிவரையில் இரண்டுமாதகால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்வதற்கு ரெலோவின் உறுப்பினர்கள் பலரும் தயாராக இல்லை. அவர்கள் உடனடியாகவே செல்வம் வெளியேறவேண்டும் என்று கொந்தளிக்கிறார்கள். வரும் நாள்களில் இதன் பிரதிபலிப்பு மேலும் பெரிதாக வெடிக்கும் என்று தெரிகிறது.

இவ்வளவும் நடந்த பின்னரும் தலைமைப் பதவியிலிருந்து வெளியேறுவதுதான் தனக்கு அவமானம் என்று செல்வம் நினைப்பது அவருக்கும் அவரது கட்சிக்குமான பின்னடைவு அல்ல, அது ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசிய அரசியலுக்குமான அழிவுப் பாதை. அதை உணராது செல்வத்திற்கு இரண்டு மாத அவகாசம் வழங்கிய ரெலோவின் தலைமைக் குழு உறுப்பினர்களும் இந்த அரசியல் தாக்கத்தால் வருங்காலத்தில் பெரும் பாதிப்புக்களைச் சந்திப்பார்கள். அவர்களின் அரசியல் வாழ்க்கையும் பாதாளம் நோக்கிப் பாய்வதைத் தடுக்கமுடியாமல் போகும். இந்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு தெளிவான முடிவை செல்வம் எடுக்கவேண்டும். கட்சி உறுப்பினர்கள் அவரை அடித்து விரட்டும் முடிவை எடுப்பதற்கு முன்பாக, தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டுவிட்டு ஒதுங்குவதே சிறந்த முடிவாக இருக்க முடியும். தவறுகளை ஏற்றுக்கொள்வதும் அதற்காக மன்னிப்புக் கேட்பதும் அவமானம் அல்ல. அதுவே ஒரு பொறுப்பான அரசியல் தலைவருக்கு இருக்கவேண்டிய பண்பு. அதை வெளிப்படுத்தி அரசியலில் இருந்து வெளியேறுவதே அவர் செய்யவேண்டியது. மறுப்பது அவர் பதவி ஆசைபிடித்த மோசமான தலைவர் என்கிற பெயருடன் வெளியேற்றப்படுவதில் போய் முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## செல்வத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளில் இருந்து செல்வம் அடைக்கலநாதன் ஒதுங்கிக்கொள்ள, உப தலைவர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் அடுத்த ஜனவரியில் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தையும் தேசிய மாநாட்டையும் நடத்தி புதிய தலைமையைத் தெரிவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் ரெலோ தலைமைக் குழுக் கூட்டம் நேற்று நடந்தது. கட்சித் தலைவர் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் அதனால் கட்சிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புத் தொடர்பிலும் ஆராயப்பட்டது. தலைவர் மீதான குற்றச்சாட்டுக்கள் விடயத்தில் அவர் செய்தவை ஏற்றுக்கொள்ள முடியாதவை என்று தலைமைக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாகத் தெரிவித்தனர்.

எனினும் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து செல்வம் அடைக்கலநாதன் உடனடியாக வெளியேறவேண்டும் என்ற தலைமைக்குழுவின் மூத்த உறுப்பினர்களின் கோரிக்கையை செல்வம் ஏற்க மறுத்துவிட்டார். அது தற்கொலைக்கு ஒப்பான நடவடிக்கை என்று தெரிவித்த அவர், யாப்புப்படி அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டி 2026 சித்தரையில் கூட்டி புதிய தலைவரைத் தெரிந்தெடுக்கும்படியும் தெரிவித்தார். இதையடுத்து தலைமைக் குழுவில் அங்கத்துவம் வகித்த பெரும்பான்மையான உறுப்பினர்கள், உடனடியாகப் பொதுக் குழுவைக் கூட்டவேண்டும் என்று வலியுறுத்தினர்.

பொதுக் குழுவைக் கூட்டுவதற்கு முன்னர் மாவட்டக் குழுக்களைச் சீரமைத்து, பொதுக் குழுவிற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவேண்டியிருப்பதால், அந்தப் பணிகளை முடிந்த விரைவில் நிறைவேற்ற வசதியாக இரு மாத கால அவகாசம் வழங்கி அடுத்த ஜனவரியில் பொதுக் குழுக் கூட்டத்தை நடத்துவது என்று தலைமைக் குழு தீர்மானித்தது.

'தன் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நீதி விசாரணைகளுக்கு தான் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவார் என்று செல்வம் அடைக்கலநாதன் அங்கு தெரிவித்தார். அதேநேரம் சமூக ஊடகங்களில் வெளியான ஒலிப்பதிவுகளில் பேசியிருப்பது தானே என்பதையும் ஏற்றுக்கொண்டார். இதைத் தொடர்ந்து அவர் பதவியிலிருந்து விலகவேண்டும் என்று மூத்த உறுப்பினர்கள் ஆணித்தரமாக வலியுறுத்தினர். ஆனால், அதற்கு அவர் ஒப்புக்கொள்ளவில்லை. அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தை நடத்தி புதிய தலைவரைத் தெரிவு செய்யும்படியும், அதுவரையில் தான் கட்சியின் தலைமைப் பதவிக்குரிய பணிகள் எதனையும் ஆற்றாது ஒதுங்கியிருப்பார் என்றும் தெரிவித்தார். இதையடுத்து கட்சியின் உப தலைவர் ஹென்றி மகேந்திரன் தலைமையில் பொதுக் குழுவைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுப்பது என்று தலைமைக்குழு முடிவு செய்தது என்று தலைமைக் குழு உறுப்பினர் ஒருவர் 'காலைக் கதிர்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியின் இந்தக் கூட்டம் தொடர்பில் பேச்சாளர் சுரேன் குருசாமி வவுனியாவில் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக்குழு கூட்டம் வுனியாவில் நடைபெற்றது. இதில் கட்சிக்கு எதிரான குற்றச்சாட்டுகள், 2026 பேராளர் மாநாடு மற்றும் அரசியல் நிலைப்பாடு குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

கடந்த சில வாரங்களாக திட்டமிட்ட வகையிலே சில முகநூல்களிலும், இணைய தளங்களிலும் எமது கட்சிக்கு எதிரான அல்லது கட்சியை களங்கப்படுத்தும் வகையிலே சில ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு விமர்சனங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன .

அது சம்பந்தமாக தலைமை குழுவிலே நாங்கள் கூடி ஆராய்ந்திருந்தோம். அதற்கான சரியான வழிமுறைகள் அதைக்கையாளுவதும், தொடர்ந்து கட்சியை முன்னெடுத்து செல்வதும் சம்பந்தமான விடயங்களைப் பரிசீலிப்பதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டன. அந்த முடிவாக மிக விரைவிலே அதாவது ஜனவரி 2026க்குள் எங்களுடைய கட்சியினுடைய பேராளர் மாநாட்டை நடத்துவது என்றும், அனைத்து மாவட்டத்தின் உறுப்பினர்களையும் ஒருங்கமைத்து இது சம்பந்தமான முடிவுகளை எட்டி எங்களுடைய கட்சியை மேலும் பலப்படுத்திக்கொண்டு பயணிப்பதற்கான தீர்மானத்தை எடுத்திருக்கிறோம்.

குறிப்பாக அண்மைக் காலமாக நீங்கள் சொல்லுகின்ற அதாவது ரெலோ கட்சியினுடைய தலைவராக இருக்கும் செல்வம் அடைக்கலநாதன் தொடர்பாகவும் ஒரு பெண் தொடர்பானதாகவும் வெளிவந்த தகவல் திட்டமிட்டு பரப்பப்பட்டது. இது உண்மையா அல்லது இல்லையா என்பதை ஆராய்வதற்காக தலைமைக் குழுவில் ஒரு முக்கியமான குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இந்த விடயங்களை பேராளர் மாநாட்டில் இது சம்பந்தமான வெளிப்படுத்தலை அவர்கள் செய்வார்கள்.

கட்சி தலைவரை மாற்றுவது தொடர்பாகக் கலந்துரையாடப்படவில்லை. பொதுவாக எங்களுடைய கடந்த கால தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்குப் பின்னராகப் பல தடவைகள் எங்களுடைய கட்சி கூடி ஆராய்ந்திருந்தது. எங்களுடைய மாவட்ட ரீதியான, தொகுதி ரீதியான, வட்டார ரீதியான கட்சி கட்டமைப்பையும் அதேபோன்று தலைமைக் குழுவிலும் எதிர்காலத்தில் இளைஞர்களுக்கான இடைவெளியையும், புதியவர்களுகான இடைவெளியையும் ஏற்படுத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டையும் நாங்கள் எடுத்திருக்கிறோம்.

அது சம்பந்தமாக தலைமைக் குழுவில் நாங்கள் தீர்மானிக்க முடியாது. பேராளர் மாநாட்டில் தான் அப்படியான மாற்றங்களையும் கொண்டுவரவேண்டும் என்ற தீர்மானத்தையும் எடுத்திருக்கிறோம். அந்த பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்ற எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர்கள் கைகளிலே தான் அந்த விடயங்களை நாங்கள் கையளிப்போம்.

எங்கள் கட்சியின் மீது காழ்புணர்ச்சி கொண்ட அல்லது அரசியல் ரீதியாக திட்டமிட்டு எங்கள் கட்சியின் மீது சேறு பூச வேண்டும் என்று அல்லது அரசியல் ரீதியாக எங்களைத் தாக்கவேண்டும் என்று திட்டமிட்டவர்கள் ஊடாகத்தான் ஒரு பிழையான ஒரு பரப்புரை முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

2026ஆம் ஆண்டு பாதீடு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாகவும் பேசப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமைதான் அந்தப் பாதீடு தாக்கல் செய்யப்பட்டிருப்பதனால் அதைப்பற்றிச் சரியாகப் படித்துச் சரியான விடயங்களை ஆராய்ந்து முன்னெடுப்பதற்கான கால அவகாசம் தேவைப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த வாரத்தின் மத்திய பகுதியிலே மீண்டும் எங்களுடைய தலைமைக்குழு இணைய வழியின் ஊடாகக்கூடி அந்தப் பாதீடு சம்பந்தமான தீர்மானங்களை எடுப்பதாக இருக்கும்.

நவம்பர் 21 கொழும்பிலே எதிர் அணியினர் இணைந்து எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு திட்டமிட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எங்களுக்கு அதற்கான அழைப்பு வரவும் இல்லை. அதில் நாங்கள் கலந்து கொள்வதும் சாத்தியமில்லை.

தமிழ் அரசுக் கடாசியுடன் இணைவது பற்றி நாங்கள் பேசியிருந்தோம். நாங்கள் அந்த முடிவை அறிவிப்பதற்கு முன்னதாக அவர்களுடைய நிபந்தனை என்ன என்பது தெரியவேண்டும். அடுத்தது நாங்கள் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியாக இன்று பயணித்துக் கொண்டிருக்கிறோம். அதேபோன்று தமிழ் தேசியப் பேரவையுடன் நாங்கள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு பயணித்துக் கொண்டிருப்பதினாலே அவர்களோடும் கலந்தாலோசித்து இதை எப்படி முன்னகர்த்துவது என்று கலந்துரையாடவேண்டும்.

இந்த ஒற்றுமையை நாங்கள் நேசிக்கிறோம். இந்த அரவணைப்பை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரம் இதை எப்படி செயல்படுத்துவது என்பதை எங்களுடைய அங்கத்துவக் கட்சிகளோடும் கலந்தாலோசித்துத்தான் முடிவெடுப்போம் - என்றார்.

(100)

## நவ. 21 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகளின் பேரணி நவம்பர் 21 நுகேகொடையில் நடைபெறவுள்ளது. இது ஒரு அநாவசியமான பேரணி என்றே குறிப்பிடவேண்டும். இந்த ஆளும்தரப்புக்கு மக்கள் ஐந்து ஆண்டு காலத்துக்கு ஆணை வழங்கியுள்ளார்கள்.

அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே எதிர்க்கட்சிகள் நவம்பர் 21 ஒன்றுகூடுகின்றன. பேரணிகள், போராட்டங்களினால் ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்க முடியாது. நாங்கள் இந்தப் பேரணியில் கலந்துக்கொள்ளப் போவதில்லை.

எதிர்க்கட்சிகளிடம் ஒருமித்த கொள்கை ஏதும் கிடையாது. ஆளும்தரப்பின் செயற்பாடுகளை விமர்சிப்பதாயின் முதலில் எதிர்க்கட்சிகளிடம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கைத் திட்டம் ஏதும் இருத்தல் வேண்டும் - என்றார்.


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எல்லை தாண்டிய மீன்பிடி: கைது மட்டுமே தீர்வா?

பருத்தித்துறை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடித்த 14 இந்திய மீனவர்கள் நேற்று அதிகாலையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். கடந்த இரண்டு வாரங்களில் இதுவே நான்காவது பெரிய கைது நடவடிக்கையாகும். அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி, 2024ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையினர் 497 இந்திய மீனவர்களைக் கைது செய்துள்ளனர். 66 மீன்பிடிப் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர். 2025ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களிலேயே 300க்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 40க்கும் மேற்பட்ட படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் பெரும்பாலும் அழிக்கப்படுகின்றன அல்லது நீண்டகாலம் கடற்படை தளங்களில் நிறுத்தப்பட்டு சேதமடைகின்றன. இதனால் ஒவ்வொரு படகுக்கும் சராசரியாக ரூ. 40 லட்சம் முதல் 60 லட்சம் வரை மதிப்புள்ள சொத்துகள் இழக்கப்படுகின்றன. இதுவே இந்திய கடலோர மீனவர் சமூகங்களுக்கு பெரிய பொருளாதார சுமையாக மாறியுள்ளது. மட்டுமன்றி தேவையற்ற சொத்தழிவாகவும் மாறுகின்றது.

### கைது அவசியம் - ஆனால் தீர்வு அல்ல

எல்லைதாண்டி மீன்பிடிப்பது ஒரு சட்ட மீறலாகும். இது இலங்கையின் கடல் வளங்களுக்கும் சிறு மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கும் நேரடி அச்சுறுத்தலாகும். எனவே, கைது நடவடிக்கை அவசியமானது. ஆனால் 'கைது செய்து விடுதல்' என்ற நடைமுறை ஒரே தீர்வாக இருக்க முடியாது. இந்தப் பிரச்சினை ஒரு சட்டமுறை மீறல் மட்டுமல்ல – அது ஒரு சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சிக்கல் ஆகும்.

இலங்கை மீனவர்கள் பாரம்பரிய முறையில் சிறிய வலைகளைப் பயன்படுத்தி கடலில் உழைக்கும் நிலையில், இந்திய மீனவர்கள் இழுவை மடி எனப்படும் பொட்டம் ட்ரோலிங் (Trawling) போன்ற அழிக்கும் மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவது கடல் உயிர் வளங்களை விரைவில் அழிக்கின்றது. இதன் விளைவாக இலங்கையின் வடக்கு கடல்பகுதியில் மீன் வளம் குறைந்து, மீனவர்களுக்கிடையே மன அழுத்தம் மற்றும் மோதல் அதிகரித்து வருகிறது.

### ஒத்துழைப்பு ஒப்பந்தம் அவசியம்

கைது நடவடிக்கைகள் தொடர்ந்தாலும் பிரச்சினை தொடர்கிறது என்பதற்கு காரணம், நிலையான ஒத்துழைப்பு ஒப்பந்தம் இல்லாமையே. இலங்கை மற்றும் இந்தியா இடையே, மீன்பிடி எல்லைகள், அனுமதி முறைமைகள் மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்கள் குறித்த ஒரு நிரந்தர ஒப்பந்தம் தேவை.

அத்தகைய ஒப்பந்தம் கீழ்கண்டவைகளை உள்ளடக்க வேண்டும்:

எல்லை வரம்புகளை தெளிவுபடுத்தி, மீனவர்களுக்கு றூஊணறீ வழிகாட்டல் சாதனங்கள் வழங்குதல்.

இரு நாடுகளின் கடற்படைகள் இணைந்து கண்காணிப்பு குழுவை அமைத்தல்.

அழிக்கும் மீன்பிடி முறைகளை முற்றிலும் தடை செய்து, மாற்று வாழ்வாதார உதவிகளை வழங்குதல்.

கடல் வளங்களைப் பகிர்ந்து பயன்படுத்தும் நிலைநிறுத்தப்பட்ட மீன்பிடி ஒப்பந்தம் உருவாக்குதல்.

### உரிமைகள் மற்றும் வாழ்வாதாரம்

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீண்டநாள் சிறை தண்டனைகளுக்கு ஆளாகும் போது, அவர்களின் குடும்பங்கள் மிகுந்த பொருளாதார நெருக்கடியில்சிக்குகின்றன. பலர்நீதிமன்றவழக்குகளில்மாதக்கணக்கில் சிக்கி விடுவிக்கப்படுகின்றனர். இந்திய வெளிவிவகார அமைச்சகத்தின் (னிசிபு) 2024 அறிக்கையின்படி, ஒவ்வொரு ஆண்டும் 500 600 இந்திய மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்படுகின்றனர்; அதில் பெரும்பாலோர் குற்றவாளிகளாக அல்ல, அவசியத்தால் கடலை கடக்கும் தொழிலாளர்களாகவே உள்ளனர்.

எனவே, கைதுநடவடிக்கைகள்மட்டுமின்றி, நீதிமுறைவிரைவாக்கமும் மனிதாபிமான அணுகுமுறையும் அவசியமாகின்றன.

படகுகள் அழிக்கப்படுவது, மீனவர்களுக்கு மட்டுமல்ல, இந்திய அரசுக்கும்பெரும்அழுத்தமாகமாறியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கை கடற்படையால் கைப்பற்றப்பட்ட 170க்கும் மேற்பட்ட படகுகள் அழிக்கப்பட்டுள்ளன. இது சுமார் 80 கோடி இந்திய ரூபாய்க்கு மேற்பட்ட சொத்திழப்பை உருவாக்கியுள்ளது.

இந்நிலையிலும், எல்லை மீறல் சம்பவங்கள் குறையாமல் இருப்பது, அரசியல் மட்டத்தில் தீர்வின்மை என்பதையே வெளிப்படுத்துகிறது.

### கைது தொடக்கம் மட்டுமே

இதன் ஊடாக, இந்தப் பிரச்சினைக்கு கைது மட்டுமே தீர்வல்ல என்பது தெளிவாகின்றது. எல்லை தாண்டிய மீன்பிடி ஒரு சட்டவிரோதம்; அதற்கு எதிரான நடவடிக்கை தவிர்க்க முடியாதது. ஆனால் அதற்கான கைது தீர்வின் தொடக்கம் மட்டுமே. நிலையான ஒத்துழைப்பு, வாழ்வாதார மாற்று வழிகள், கடல் வள பாதுகாப்பு, மீனவர் உரிமை உறுதி இவை இணைந்தால்தான் உண்மையான தீர்வு கிடைக்கும்.

அல்லாமல் ஒவ்வொரு வாரமும் 14 பேர் கைது, 2 படகுகள் பறிமுதல் என்ற செய்தி மீண்டும் மீண்டும் வெளிவரும் ஒரு வட்டச்சுழற்சி உருவாகும். அதில் இழப்பது கடல் வளங்களும், மீனவர்களின் நம்பிக்கையும், இரு நாடுகளுக்கிடையேயான நட்பும்தான்.

கைது செயல் வலிமையானது, ஆனால் அதன் பின்னணி மாற்றங்களும் அதே அளவு வலிமையாக இருக்கவேண்டும்.

# தேசிய சைபர் மாநாடு நவ. 12 கொழும்பில்

'நம்பகமான மற்றும் சைபர் மீள்தன்மை கொண்ட தேசத்தை உருவாக்குதல்' என்ற கருப்பொருளில், இலங்கையின் 16ஆவது தேசிய சைபர் பாதுகாப்பு மாநாடு நவம்பர் 12 கொழும்பில் நடைபெறவுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் உட்பட 400க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய இந்த நிகழ்வில் அனுர குமார திசாநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இந்த தேசிய நிகழ்வை டிஜிட்டல் பொருளாதார அமைச்சகம் மற்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. இது கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வல்லுநர்கள், கல்வியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அரசு, தனியார் துறை, பெருநிறுவன அமைப்புகள்,அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகளை ஒன்றிணைக்கிறது.

அதிகரித்து வரும் சைபர் அச்சுறுத்தல்களின் சகாப்தத்தில் சைபர் தயார்நிலை, டிஜிட்டல் நம்பிக்கை மற்றும் தேசிய மீள்தன்மையை மேம்படுத்துவதற்கான நாட்டின் மூலோபாய திசையை பிரதிபலிக்கும் 'கொள்கையை வடிவமைத்தல், நடைமுறையை செயல்படுத்துதல் மற்றும் தேசிய மறுமொழி திறனை வலுப்படுத்துதல்' என்ற துணை கருப்பொருளில் மையமாகக் கொண்டுள்ளது. இந்த மாநாடு,சைபர் பாதுகாப்பு மேம்பாடு மற்றும் திறன் மேம்பாட்டில் ஒவ்வொரு துறையும் செயலில் பங்கு வகிக்கும் வலுவான பல பங்குதாரர் ஒத்துழைப்பத் தொடர்ந்து உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

டிஜிட்டல் பொருளாதார அமைசின் பதில் செயலாளர் வருண ஸ்ரீ தனபால, மாநாட்டிற்கான தொடக்க உரையை நிகழ்த்துவார். பொருளாதார விரிவாக்கம் மற்றும் உலகளாவிய போட்டித் தன்மையின் மூலக்கல்லாக சைபர் பாதுகாப்பை வலியுறுத்துவார் அவர். இதைத் தொடர்ந்து இலங்கையின் செயல் தலைமை நிர்வாக அதிகாரி கலாநிதி கனிஷ்கா கருணாசேன சிறப்பு உரை நிகழ்த்துவார். ஆசிய வளர்ச்சி வங்கியின் இலங்கைக்கான இயக்குநர் தகாஃபுமி கடோனோ, தேசிய தயார் நிலையை வடிவமைக்கும் உலகளாவிய சைபர் பாதுகாப்பு போக்குகள் குறித்து கவனம் செலுத்தும் முக்கிய உரையை நிகழ்த்துவார்.

டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர், டிஜிட்டல் அமைப்புகளில் பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவது குறித்து ஒரு உரையை நிகழ்த்துவார். கூடுதல் விருந்தினர் உரைகள், கருப்பொருள் அமர்வுகள் மற்றும் தீவிர விவாதங்கள் தேசிய சைபர் நிர்வாகம், முக்கியமான உள்கட்டமைப்பு பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு சட்டம் மற்றும் தரவு பாதுகாப்பு கட்டமைப்புகள்,ஆன்லைன் பாதுகாப்பு, செயல்பாட்டு மீள்தன்மை, உலகளாவிய சைபர் பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு, கிளவுட் கம்ப்யூட்டிங் மற்றும் குவாண்டம் அமைப்புகள் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களின் பொறுப்பான பயன்பாடு ஆகியவற்றை ஆராய்வார்கள்.

டிஜிட்டல் பொருளாதார வளர்ச்சியின் அடித்தளமாக சைபர் பாதுகாப்பு, டிஜிட்டல் தேசத்திற்கான சட்டப்பூர்வ தயார்நிலை,பொது ஆன்லைன் பாதுகாப்பு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பாதுகாப்பாக ஏற்றுக்கொள்வது ஆகியவற்றை பல குழு விவாதங்கள் ஆராயும். சான்றுகள் அடிப்படையிலான தேசிய கொள்கை மற்றும் நிறுவன வளர்ச்சியை ஆதரிக்க பல துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் இந்த குழுக்களுக்கு பங்களிப்பார்கள்.

இந்த ஆண்டு மாநாட்டை முக்கிய தொழில்துறை ஆதரவாளர்கள் ஆதரிக்கின்றனர். டயலொக் எண்டர்பிரைஸ் முதன்மை ஸ்பான்சராகவும், செக் பாயிண்ட் பிளாட்டினம் ஸ்பான்சராகவும் செயல்படுகிறது. ஃபோர்டினெட் கோல்ட் ஸ்பான்சராகவும்,டிக்டோக் ஆன்லைன் பாதுகாப்பிற்கான மூலோபாய கூட்டாளராகவும், சென்ட்ரி லேப்ஸ் வெள்ளி ஸ்பான்சராகவும் இணைகிறது. இந்த அமைப்புகளின் ஒத்துழைப்புஇ இலங்கையில் தேசிய சைபர் பாதுகாப்பு மற்றும் பொது டிஜிட்டல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

சைபர் பாதுகாப்பில் கூட்டு தேசிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான இலங்கையின் மிக முக்கியமான தளங்களில் ஒன்றாக தேசிய சைபர் பாதுகாப்பு மாநாடு தொடர்கிறது. 2025 பதிப்புஇ நிறுவன திறன்களை வலுப்படுத்துதல்இ பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் எதிர்காலத்திற்கான பொறுப்பான டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் பங்கை வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சுகாதாரத்துறையை டிஜிட்டலாக்கும் சாத்தியங்கள் தொடர்பில் ஆராய்வு

*இலவச சுகாதாரத்துறையை டிஜிட்டல் முறையில் மாற்றுவதற்கான வழிகாட்டுதல் குழுவை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*நாட்டின் இலவச சுகாதாரத் துறையை டிஜிட்டல் முறையில் மாற்றுவதற்கான வழிகாட்டுதல் குழுவை நிறுவுவது தொடர்பாக சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் பிரதான கேட்போர் கூடத்தில் சமீபத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.*

*அதற்கமைய சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், அடுத்த பத்து ஆண்டுகளுக்கு (2026-2035) செயல்படுத்தப்படவுள்ள தேசிய சுகாதாரக் கொள்கைக்கு ஏற்ப நாட்டின் இலவச சுகாதார அமைப்பை டிஜிட்டல் முறையில் மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் அதற்காகப் பின்பற்ற வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்ட கால முறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.*

*டிஜிட்டல் மயமாக்கலுக்கான ஒரு மூலோபாய கட்டமைப்பை நிறுவுதல், டிஜிட்டல் ஊடகங்கள் மூலம் சுகாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், சர்வதேச ஆதரவுடன் முக்கிய திட்டங்களை (HIQI, HSEP, PHSEP) ஏற்றுக்கொள்வது மற்றும் செயல்படுத்துதல், டிஜிட்டல் மாற்றத்திற்கான முக்கிய கருத்துக்கள் மற்றும் தேவைகள், வழிநடத்தல் குழு கருத்துக்கள், வரைவு கருத்துக்கள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் குறித்து இங்கு விவாதிக்கப்பட்டன.*

*தொடர்புடைய தரவுகளின் பாதுகாப்பான சேமிப்பு, மனிதவள மேம்பாடு மற்றும் இந்துப் பணியை திறம்பட நிறைவேற்றுவதற்குத் தேவையான பயிற்சி குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. மேற்கண்ட விடயங்கள் தொடர்பான சட்ட வரைவு சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அர்ஜுன திலகரத்னவினால் சமர்ப்பிக்கப்பட்டது.*

*மேலும் பிரதி சுகாதார அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி, டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் குறித்த மூத்த அரசுத்தலைவர் ஆலோசகர் வைத்தியர் ஹான்ஸ் விஜேசூரிய, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜசிங்க, அமைச்சின் மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.*

# ‘அஸ்வெசும’ தகவல் புதுப்பிப்பு தற்போது தொடக்கப்பட்டுள்ளது

‘அஸ்வெசும’ வருடாந்த தகவல் புதுப்பிப்பு தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2023ஆம் ஆண்டில் ‘அஸ்வெசும’வில் முதன் முறையாகப் பதிவுசெய்து தற்போது கொடுப்பனவுகளைப் பெறும் மற்றும் பெறாத குடும்பங்கள் மற்றும் தனிநபர்கள் இந்த புதுப்பிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று நலன்புரி நன்மைகள் சபை குறிப்பிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் மனக்குறைகளை தெரிவித்த விண்ணப்பதாரர்களுக்குத் தகவல்களை புதுப்பிக்க வேண்டிய கட்டாயமில்லை என்றும், அதற்குக் காரணம், அந்த விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே தகவல் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

மேலும்,தகவல்களைமீண்டும்உறுதிப்படுத்தும்போது குடும்ப உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை மற்றும் செயற்படக் கூடிய கையடக்கத் தொலைபேசி இலக்கம் என்பன இருப்பது அத்தியாவசியமாகும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இணைய இணைப்புள்ள கணினி அல்லது ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி மூலம் https://eservices.wbb.gov.lk என்ற இணைய முகவரிக்குச் சென்று, தாளில் குறிப்பிடப்பட்டுள்ள தமது கூஷிகூஷி இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தித் தகவல் முறைமைக்குள் உட்பிரவேசித்து, தகவல் உறுதிப்படுத்தல் மெனுவிற்குச் சென்று குடும்பத் தகவல்களை உள்ளிடலாம்.

அவ்வாறு இல்லையெனில், பிரதேச செயலகத்தின் நலன்புரி கொடுப்பனவுத் தகவல் பிரிவுக்குச் செல்வதன் மூலமாகவோ அல்லது கிராம உத்தியோகத்தர் ஊடாக ஆண்டுத் தகவல் புதுப்பிப்பு விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலகத்தின் நலன்புரி கொடுப்பனவுப் பிரிவில் சமர்ப்பிக்கலாம்.

அதன்படி, அஸ்வெசுமவின் முதல் கட்டத்தில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் தனிநபர்களும் தகவல் புதுப்பித்தலில் பங்கேற்பது கட்டாயமாகும் என்றும், பங்கேற்காத குடும்பங்களும் தனிநபர்களும் அடுத்த ஆண்டில் அஸ்வெசும கொடுப்பனவுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள் என்றும் நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

# மாலைதீவுக்கு சென்றது தனி விசாரணைக் குழு

*மாலைத்தீவு பாதுகாப்புப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்ட போதைப்பொருள் கடத்திய மீன்பிடிப் படகு மற்றும் அதன் மீனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள, நாட்டின் பாதுகாப்புப் பிரிவுகளின் விசேட குழுவொன்று மாலைத்தீவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.*

*இவ்வாறு மாலைத்தீவுக்குப் புறப்பட்டுச் சென்ற குழுவில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளும் கடற்படையைச் சேர்ந்த அதிகாரிகளும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இலங்கையூடாகச் செயற்படும் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புத் தொடர்பில் நாட்டின் பாதுகாப்புப் பிரிவுகள் வழங்கிய புலனாய்வுத் தகவல்களுக்கமைய, மாலைத்தீவு பாதுகாப்புப் பிரிவினர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட மீன்பிடிப் படகு ஒன்றையும் ஆறு மீனவர்களையும் தமது பொறுப்பில் எடுத்திருந்தனர்.*

*குறித்த படகு தற்போது மாலைத்தீவுக்குக் கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.*

*அதன்படி, கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொகுதியையும் மீனவர்களையும் விசாரணை செய்வதற்காக இலங்கைப் பிரதிநிதிகள் குழுவொன்று தற்போது மாலைத்தீவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

# சீனிகமவில் கைதான 6 பேருக்கும் 7 நாள்களுக்குத் தடுப்புக் காவல்

*5 கிலோ கிராம் ஹெராயினுக்கு மேல் வைத்திருந்த குற்றச்சாட்டில் சீனிகம பகுதியில் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் 7 நாட்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*நவம்பர் 7, விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் நடத்தப்பட்ட சோதனையில் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.*

*கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் காலி, அஹங்கம, தெல்வத்த, வதுகெதர மற்றும் சீனிகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்றும் தொடக்க விசாரணைகளில் தெரியவந்துள்ளது.*

*இதனிடையே, பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் செயல்படுத்தப்படும் குற்ற மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் கீழ், 30,954 பேர் சோதனை செய்யப்பட்டு, சந்தேகத்தின் பேரில் 693 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இதில், குற்றங்களுடன் நேரடியாக தொடர்புடைய 26 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 263 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 118 பேரும் மற்றும் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய 15 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.*



காலைக்கதிர் Kalaikkathir

## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற 'முழு நாடும் ஒன்றாக' செயற்திட்ட கலந்துரையாடலை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் ஒழிப்புக்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் சுற்றிவளைப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். சமூக கட்டமைப்பில் இருந்து போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்க வேண்டும் என்பதன் அவசியத்தை மக்கள் விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் வலையமைப்பை இல்லாதொழிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்தியக் கிழக்கில் தலைவறைவாகியுள்ள இலங்கையைச் சேர்ந்த 7 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இலங்கை பொலிஸ் அதிகாரிகளிடம் சரணடைய இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

போதைப்பொருளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அரசியல் தரப்பினர் கட்சி பேதமின்றி ஒத்துழைப்பு வழங்கவேண்டும். போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்கள் ஒன்றுக்கொண்டு தொடர்புப்பட்டுள்ளன. ஆகவே போதைப்பொருள் வர்த்தக வர்த்தக வலையமைப்பை இல்லாதொழித்தால் பாதாளக் குழுக்களை கட்டுப்படுத்தலாம்.

'முழு நாடும் ஒன்றாக' செயற்திட்டம் எதிர்கால இளம் தலைமுறையினரை இலக்காகக் கொண்டது. நாடளாவிய ரீதியில் சகல மாவட்டங்களிலும் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படும். ஆளும்தரப்பின் செயற்பாடுகளுக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

## வெட்கம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் ஆணைக்குழு செயற்படுகிறது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார படுகொலையாளிகள் யார் என்பதை உயர் நீதிமன்றம் தெளிவாக அறிவித்துள்ளது. நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழு ஊடக கண்காட்சியை மாத்திரம் நடத்துகிறது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க முறையற்ற வகையில் தெரிவு செய்யப்பட்டார் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தினார். இந்த நியமனத்தின்போது அரசமைப்பு பேரவைக்கும் பொய்யுரைக்கப்பட்டுள்ளது.

வெட்கம் என்பதொன்று இருக்குமாயின் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க பதவி விலகவேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரால் மாதவ தென்னக்கோனை இந்தப் பதவிக்கு நியமிக்கவேண்டும்.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் முறையற்ற வகையில், மோசடியாக பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பாராயின் ஆணைக்குழு எவ்வாறு இலஞ்சம் அல்லது ஊழலை இல்லாதொழிக்க சுயாதீனமாக செயற்படும்?

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஊடக கண்காட்சியை மாத்திரம் நடத்திக் கொண்டிருக்கிறது. நாட்டு மக்களை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய ஊழல்வாதிகளுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை - என்றார்.

## பட்டதாரிகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரான பொதுத் தேர்தலின் போதும், தொழில்களைப் பெற்றுத் தருவோம் என வாக்குறுதிகள் வழங்ககப்பட்டன. பட்டதாரிகளின் வேலையில்லா நிலைமையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, மாவட்ட மட்டத்தில் அமைப்புகளை நிறுவிய ஆளும்தரப்பு, அந்த அமைப்புகளின் தலைவர்களுக்கு மாத்திரம் நியமனங்களைப் பெற்றுக் கொடுத்து, ஏனைய பட்டதாரிகளைக் கைவிட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னர், அரசுத் தலைவர் அநுரகுமார தான் ஆட்சிக்கு வந்ததும் நாட்டில் 35,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் பெற்றுத் தருவேன் என்று உறுதியளித்தார். இந்த வாக்குறுதி வளமான நாடு, அழகான வாழ்க்கை எனும் கொள்கை அறிக்கையின் 72 ஆவது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

பட்டதாரிகள் எந்தெந்த துறைகளில் அரச சேவையில் உள்வாங்கப்படுவர் என வழங்கிய வாக்குறுதிகளை அரசுத் தலைவரும் ஆளும்தரப்பும் இருவரவு செலவுத் திட்டங்களிலும் மீறியுள்ளனர். அவற்றை முற்றாக மறந்து செயற்பட்டு வருகின்றனர். பொய் கூறி பட்டதாரிகளை ஏமாற்றியது ஏன் ? வேலையில்லாப் பட்டதாரிகளை அலைக்கழித்தது ஏன்?

வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்குமாறு ஆளும்தரப்பை வலியுறுத்துகின்றோம். எதிர்க்கட்சி இதற்கான முழு ஆதரவையும் வழங்கும். மேலதிக ஒதுக்கீட்டு மதிப்பீடுகளுக்கான ஆதரவையும் வழங்குவோம். இவர்களுக்கு இப்போதாவது தொழில்களைப் பெற்றுக் கொடுங்கள்.

பொய்களால் நாட்டை ஆள்வதைக் கைவிடுங்கள். மூன்று தேர்தல்களில் வழங்கிய இந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். பட்டதாரிகளின் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொடுங்கள். பட்டதாரிகளை மன உளைச்சலுக்கு ஆளாக்காமல் இருப்பது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்றார்.

## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தி அதன் இரண்டாவது வரவு - செலவு திட்டத்தின் ஊடாக எமது முறைமையை அவ்வாறே முன்னெடுத்துச் சென்றிருக்கிறது. எமது ஆடையை எம்முடையது எனக் கூறாமல் அவர்கள் அணிந்து செல்கின்றனர். சர்வதேச நாணய நிதிய வேலைத் திட்டத்தை அன்று நாம் அங்கீகரித்தோம். அன்று அதனை எதிர்த்தவர்கள் இன்று எவ்வித மாற்றமும் இன்றி அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

முதலாவது வரவு - செலவு திட்டத்தில் பல அழகிய கதைகளைக் கூறினர். ஆனால் அந்த கதைகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இம்முறை வரவு - செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கதைகளை நான்கு மணித்தியாலங்களாக எதிர்க்கட்சிகளை தூற்றிக் கொண்டு அரசுத் தலைவர் முன்வைத்தார். இந்த வரவு - செலவு திட்டம் அடுத்த ஆண்டு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

அன்று அமைச்சர்கள் வாகனங்களைப் பயன்படுத்துவதை கீழ்தரமான செயல் என விமர்சித்தனர். ஆனால் இன்று அவர்களே அதைத்தான் செய்கின்றனர். மக்களுக்கு இல்லாத எதுவும் எமக்கும் தேவையில்லை என்று கூறித்தான் இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். தற்போது 1500க்கும் அதிக கெப் ரக வாகனங்களை இறக்குமதி செய்யவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 22 மில்லியன் மக்களுக்கும் இன்று கெப்ரக வாகனங்கள் இருக்கின்றதா?

இவை அனைத்தையும் மறைப்பதற்காக தற்போது போதைப்பொருள் நாடகத்தை அரங்கேற்றுகின்றனர். துப்பாக்கிச்சூட்டில் அரசியல்வாதியொருவர் கொல்லப்பட்டால் அவர் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினால், அவருக்கு பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்பிருப்பதாகவோ அல்லது அவர் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர் என்றோ அமைச்சர்கள் கூறினர். ஆனால் கடந்த வாரம் தேசிய மக்கள் சக்தியின் பிரதேசசபை உறுப்பினரின் குடும்பத்தால் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கள் தொடர்பில் எந்தவொரு தகவலையும் ஊடகங்களுக்கு வழங்க வேண்டாம் என பொலிஸாருக்கு சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. ஊடகங்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டாம் எனக் கூறும் உரிமை யாருக்கும் இல்லை. மக்களின் தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமை பறிக்கப்படுவதை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். இந்தக் காரணி உள்ளிட்ட ஆளும்தரப்பின் சகல ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராகவும் நவம்பர் 21 நுகேகொடை எதிர்ப்பு பேரணியில் குரல் கொடுப்போம் என்றார்.

## பெருந்தோட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசிய அபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இம்முறை முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவு திட்டம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இதுவரைக் காலமும் ஆட்சி செய்த சகல ஆட்யாளர்களுக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் வாக்களித்துள்ளனர். குறிப்பாக மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பெருந்தோட்டத் தொழிலாளர்களது வாக்குகளை மாத்திரம் பெற்றுக் கொண்டார்களே தவிர, அவர்களது நலன்களில் அக்கறைகொள்ளவில்லை.

அவர்கள் அமைச்சுப் பதவிகளையும், வாகனங்களையும், அரச இடங்களையும் வரையறையின்றி பெற்றுக் கொண்டனர். ஒவ்வொரு தேர்தல்களின்போதும், மலையக மக்களுக்கு வீடு வழங்கப்படும் என்றும், காணி வழங்கப்படும் என்றும் கூறுவார்கள். ஆனால் என்றுமே அதனை நடைமுறைப்படுத்தியதில்லை. அதேபோன்று தான் சம்பள விவகாரத்திலும் தொடர்ச்சியாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ஆனால் இம்முறை பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எவ்வித ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுக்காமலேயே சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுப்பதற்கு எமது ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தில் முடிந்தால் 10 ரூபாவை அதிகரித்துக் காண்பிக்குமாறு சவால் விடுக்கப்பட்டது. தற்போது அவர்களுக்கு 1350 ரூபா சம்பளம் வழங்கப்படுகிறது. அந்த சம்பளத்துடன் ஆளும்தரப்பு 200 ரூபாவை வழங்குகிறது. கம்பனிகள் 200 ரூபாவை வழங்குகின்றன. அதற்காக 500 கோடி ரூபா நிதியை ஆளும்தரப்பு ஒதுக்கியுள்ளது. வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பிற்காக ஆளும்தரப்பு நிதி ஒதுக்கவில்லை.

முதன் முறையாக தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பே பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்காக 500 கோடி ரூபா நிதியை ஒதுக்கியிருக்கிறது. எனவே எமக்கு சவால் விடுத்துக் கொண்டிருப்பதை நிறுத்தி, தம்மால் மக்களுக்கு என்ன செய்ய முடியும் என சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தொடர்ச்சியாக நீங்கள் அந்த மக்களை ஏமாற்றியதால் தான் அவர்கள் உங்களை புறந்தள்ளியிருக்கின்றனர். மலையக பிரதிநிதிகளில் சிலர் தற்போது சஜித் பின்னாலும், சிலர் நாமல் பின்னாலும் ஓடிக் கொண்டிருக்கின்றனர். அந்த இரு திசைகளிலுமே மலையக மக்கள் இனி பயணிக்கப் போவதில்லை.

நீங்கள் கூறுவதையும் மக்கள் இனி கேட்கப்போவதில்லை. அரசுத் தலைவர்யால் அறிவிக்கப்பட்ட இந்த சம்பள அதிகரிப்பு ஜனவரி முதல் வழங்கப்படும். கம்பனிகளால் வழங்கப்படும் 200 ரூபா அடிப்படை சம்பளத்தில் சேர்க்கப்படும். அரசாங்கத்தால் வழங்கப்படும் 200 ரூபா வருகை ஊக்குவிப்பு கொடுப்பனவாகும். கம்பனிகள் கடந்த அரசாங்கங்களுக்கு விளையாட்டுக்களை காண்பித்திருக்கலாம். ஆனால் எம்மிடம் அந்த விளையாட்டுக்கள் செல்லாது. எனவே நாம் கூறியதை நிச்சயம் செயற்படுத்துவோம் என்றார்.

## 14 இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுழைந்து மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது இன்று அதிகாலை காங்கேசன்துறை கடற்படை கண்காணிப்புக்குழுவினரால் கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் குறித்த மீன்பிடிப் படகைக் கைப்பற்றி அதிலிருந்த 14 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர். அவர்கள் இன்று காலையில் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்குக் கொண்டுவரப்பட்டனர். விசாரணைகளுக்குப் பின்னர் அவர்கள் கடல் தொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுகின்றனர்.

இவர்கள் இன்று (திங்கட்கிழமை) பருத்தித்துறை நீதிவான் மன்றத்தில் முற்படுத்தப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்தசிலவாரங்களாக யாழ்ப்பாணம் வடக்குக் கடல் எல்லை தாண்டி வந்து மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த வாரம் (நவம்பர் 5) மன்னார் கடல் பகுதியில் இலங்கை கடற்படையினர் நடத்திய விசேட நடவடிக்கையின்போது, ராமேஸ்வரம் மற்றும் புதுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்த 19 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களது மூன்று படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

அதற்கு முன்னரும் ஒக்டோபர் மாதத்தில் நெடுந் தீவு அருகே எல்லை மீறி வந்த 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டதுடன் பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்டனர்.

இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கிடையிலான கடல் எல்லை பிரச்சினை கடந்த பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாத நிலையில், மீனவர்களின் எல்லை மீறல் சம்பவங்கள் இருநாடுகளுக்கிடையேயான உறவிலும் கடல் வளங்களின் பாதுகாப்பிலும் சவாலாகவே மாறியுள்ளது.

கடற்படையினர், இவ்வாறான சட்டவிரோத நுழைவுகளைத் தடுக்க தீவிர கண்காணிப்புகளை மேற்கொண்டு வருவதாகவும், இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதியில்லாமல் நுழையும் எந்தவொரு நபரும் சட்டரீதியான நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## யுத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழிப்புக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை சிறையில் அடைத்தால் மாத்திரம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 2000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் 'யுக்திய' சுற்றிவளைப்பினை மேற்கொண்டார். இந்த சுற்றிவளைப்பில் நெத்தலி மீன்கள் மாத்திரமே அகப்பட்டன. சுறாக்கள் அரசியல்வாதிகளின் கட்டளைக்கு அமைய பாதுகாக்கப்பட்டன.

போதைப்பொருள் வியாபாரத்தில் பிரதான நபர்களாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் செயற்பட்ட சுறாக்களை நாங்கள் கைது செய்துள்ளோம். போதைப்பொருளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.11.2025இல் வெளியிடப்பெற்றது